428

உ

தேவிசகாயம்.

தென்கரை என்ற குழந்தையம்பதி

மாரியம்பாள் மகத்துவம்.

இஃது

பெரியகுளம்

கு. க. வே.

கற்பூர திருவேங்கடஸ்வாமி செட்டியார்

அவர்களாலியற்றியதை,

தென்கரை - வர்த்தகசங்கத்தாரால்

மதுரை வடக்குமாசிவீதி

ம. குருசாமிக் கோனாரவர்கள து

ந்திரவிலாச அச்சுயந்திரசாலையிற்

திப்பிக்கப்பெற்றது.

1921. அணா-4.

Q25:417
N21
176043

சாத்துகவிகள்.

...ல்வேலிப்பேட்டை சைவசமய சன்மார்க்க சங்கத்தின்
...ச்சரும், கொழும்பு இலங்கைச் சைவ பரிபாலன
...பையில் ஆசிரியராயிருந்தவரும், நற்குடி வேளாளர்
வரலாறு, சாலிய அந்தணர் புராணமென்ற,
...மகா சைவர் புராண முதலிய பன்னூ லாசிரியரு மாகிய
சைவத்திருவாளர்

த. ஆறுமுக நயினார்பிள்ளையவர்கள்.

எழுசீர் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உலகுபுகழ் திருவளங்கு ளந்தைநகர் மேவியரு
ளுதவியடி யவரை யாளும்
நிலவுமுகி மாரிமக மாயியின்ம கத்துவம்
நிகழ்த்தின னிறைந்த வன்பால்
விலகரிய ஷங்கரகு லத்தினை விளக்கவரு
வேங்கடசு வாமி மகியன்
இலகுதவ மதலைதிரு வேங்கடமன் சொற்பொரு
ளினிக்குமித னருமை பெரிதே.

வெண்பா.

முத்தர் பரவு முதுகுளந்தைத் தென்கரைவாழ்
வத்தகசன் கத்தார் மகிழ்சிறந்தே—உத்தமியாம்
மாமாரி யம்மை மகத்துவத்தை யச்சிட்டார்
காமாரி யன்பு கனிந்து.

உ

தேவிசகாயம்.

மாரியம்பாள் மகத்துவம்

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வானொடு புவியுங் கடலொடு கிரியும்
வயங்குபல் லுயிரொடு மேனை
ஞானமும் புகழும் நானென நரர்க்கு
நவின்றநா ராயண னருளாற்
றானல மிகுத்த குழந்தையம் பதியிற்
றுலங்கிவாழ் சுந்தரி மாரி
மானருள் புகழைக் கூறுதற் கானை
வதனனை வணங்கிவாழ்த் துவமே. (1)

எண்சீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மணிமுரசெக் காளசின்னம் பேரிடங்கா
மல்லரிசல் லரிவாத்ய கோஷ்ட மார்த்து
மணியணியா யடியர்குழாம் நிறைந்து போற்ற
யாளிமிசை யிடபமிசையழகார்நீல
மணியொளிவைக் கடலெழிலை வானை யேனை
மலைவனத்தை நிகர்த்தமயி லானசோதி
பணிவுறநற் சிலர்தொழப் பலக்குத் தேர்மேற்
பவனிவரும் மகத்துவத்தை பகருவாமே. (2)

சுப்பிரமணியர்துதி.

பண்ணவர்க்குச் சேனாதிபதியாய்நின்றும்
பகைத்தெதிர்த்த வரக்கர்களை வென்றுமீண்டுந்
தண்ணருள்சே ரிந்திரனார் மகளைவேட்டுஞ்
சரவண பவானந்த குகனேவேலா
கண்ணபுரி கடந்தடியா ருடனேவந்துன்
காணியெனுங் குழந்தைவளந் திகழவாழும்
பெண்ணரசாம் புவிமணியாம் மாரியம்பாள்
பேருரைக்க வரமருளிக் காப்பாய்போற்றி. (3)

894.811
2482

ஆக்கியோன்.

பரதின்ன யுளததி லளங்தவன் குலத்தோன்
பானுறை குழந்தையம் பதியோன்
திரத்திலு மிருந்தோன் செல்வமும் வாக்குந்
திருமக ளருணிலை படைத்தோன்
காத்தினிற் றிகிரி தரித்தவர்க் கடியோன்
கந்தவங் காரிஷி கோத்ரன்
வரத்தினி லுயர்ந்தோன் வேங்கட மகிப
னருள்திரு வேங்கட மம்மா. (4)

அவையடக்கம்.

சீருறு மதியைச் சிவணவென் றுடுக்கள்
சேணிடை திகழ்வன போலும்
வாருதி யொலியைப் பொருவலென் றெருமா
மலர்த்தட மிறைதரல் போலும்
மேருவைத் துளைத்தும் நாமென மசகம்
வேட்கைகொண் டரிப்பன போலும்
நேருறுந் தமிழ்ப்பா வாணர்முன் னடியே
னிகழ்த்துமிப் பாக்களி னியல்பே. (7)

இந்நூலரங்கேற்றியது.

சீர்திகழுந் துன்மதியாண் டானித்திங்கள்
தெய்திபதினேழு குருவாரந்தன்னி
லேர்திகழு மசுபதிநாண் மேடராசி
யிலங்குதனு லக்கினத்தி லிறைவிமாரி
பேர்திகழும் மகத்துவத்தைப் பிறங்கும்வண்ணம்
பிரபல்ய சந்நிதியிற் பெரியோர்முன்னே
தார்திகழுங் குழந்தைவதி மக்களெல்லாந்
தளைத்தோங்க வரங்கேற்றஞ் செய்திட்டேனே. (6)

600 009.

காப்பு வெண்பா,

உலகினுக்கு வித்தா யுயர்ந்துவளர் மாரி
நலமார் திருப்புகழை நாட்டிற்—பலவணமார்
செந்தமிழாற் செப்புதற்குச் சிந்தூரத்தின் மாமுகத்தான்
கந்தவர விந்தபதங் காப்பு.

(வெள்ளிமலை யொத்தபலமேடை என்றசந்தம்)

உலகிலலகில்புகழ் வாய்த்த மாரி
உத்தமியருளைப்புவி யேத்த சேயன்
செப்புதமி ழுக்குநலன் செய்தெனைநீ யாதரிப்பாய்
சீலா உமை பாலா. (1)

கொண்டல்சூழ் வளமதனைத் தேடி இந்தக்
குழந்தாபுரியதனை நாடி வந்து
சேர்நிறைந்த மாரியம்மை சீலமதைச் செப்புதற்குத்
தேவா நீ வாவா. (2)

செந்தமிழின் றெள்ளமுத முண்டு சித்தந்
தெளிந்த மகான்கள்முன்னே விண்டு செப்பும்
வாக்கியங்க ளில்லேமேதனும் மாசிருக்கி னும்பொறுத்து
ஆளும் எந்த நாளும். (3)

செந்திருவை யொத்ததிரு மானே யின்னஞ்
செப்புவேனிந் நூலின்வளந் தானே இதிற்
சிந்துவுந்தெம் பாங்குவெண்பா வந்துகூடுஞ் சந்திபோலத்
தேனே சொல்வே னேனே. (4)

பொன்கிரியை யொத்தபல நாகம் இதைப்
புகழ்வா ருயர்கிரிவ ராகம் என்று
பன்றியுருக் கொண்டுசிவன் கன்றுகட்குப் பாலளித்த
வாறே இதன் பேரே. (5)

சோழனுர் துயர்களைந்த சாமி வாழுஞ்
சுத்தமிகு மிக்குழந்தைப் பூமி இது
வேதியர்க்கு மானிபமாம் வேலவர்க்குங் காணியதா
மாகூஷி மெத்தக் காகூஷி. (6)

மூன்றுகுளங்க ணிறைந் தோங்கும் வயல்
முப்போகமே விளையும் பாங்கும் ஓங்கும்
மூக்கனுமை நக்கனுடன் முக்காலப் பூசைகள்கொளுங்
கோவில் வளம் பூவில். (7)

காஞ்சி மதுரையுடன் காசி யென்னக்
கனத்த மகிமையுறப் பேசி மேலோர்
வாழ்த்துகின்ற தீர்த்தங்களின் மாட்சிக்குமே லோங்குமிந்த
வராக நதிச் சாரகம் (8)

தென்கரை யெனுங்குழந்தைப் பேரு வாய்ந்த
சிறப்பமைந்திட்ட சோழ னூரு இதில்த்
தேவதையும் வேதியரும் மேவியே மகிழ்ச்சியுடன்
வாழும் எந்த நாளும். (9)

நாலு வருணருக்கும் மானே வளம்
நாளுக்கு நாள்பெருகத் தானே யெக்யம்
ஆரணப்படி நடத்திப் பூரணச் செல்வம்படைக்கச்
செய்வார் உல குய்வார். (10)

வேதியர் குடி வளமை மெத்த எந்த
வேளையும் வேதாகமத்தின் சத்தம் நித்தம்
ஆலயங்களி னடத்துஞ் சிலமா மறைப்படிக்காம்
பூசை மணி யோசை. (11)

நிறைந்த குழந்தைப்பதி யென்றே யிந்த
நீணிலமெ லாய்புகழும் நின்றே வளஞ்
சீருற நிறைத்திலகும் மாரியுமை சீர்த்திதனை
நீயே கேட் பாயே. (12)

கண்ணபுரி மக்களுடன் கூடி இந்தக்
கவினுர் குழந்தைதனை நாடி வந்த
மாரியுமை சோழனீய்ந்த மாமறையோர் மானிபத்தில்
மகிழாய் உளம் புகழாய். (13)

வாழ்ந்திடுமெந் நாளதனில் மக்கள் செப்பும்
வரக்குழந்தை றகளுக்குத் தக்க மிக்க
நற்குணமதாகப்பல னெக்கவே நடத்திவருங்
காலங் கலி கோலம். (14)

பாரி லவமதிப்பாய்க் குடிகள் செய்யும்
பயமற்ற செய்திகளை யடிகள் ஆன
நல்லவர் மனதுநொந்து சொல்லுவதுங் கேட்டிருந்து
மாரி கோபம் மீறி. (15)

சிங்கமிசை வீற்றிருக்குந் தேவி செய்த
சங்கதிடைக் கேட்டிடுவாய் மேவி யென்ற
சீலமார் திருவேங்கட சாமியைத்தெம் பாங்குபகப்
பாட்டால் சொல்லக் கேட்டாள். (16)

மாரிபராக்கிரமம்.

வெண்பா.

என்று மடியார்க் கிரங்கியருள் மாரியுமை
நன்றுநன் றென்று நகைத்தருளி—குன்றாத
அன்ப ரிடத்தி லறிவித்துங் கேளாத
தென்பறிந்து கொண்டாள் சினம்.

தெம்மாங்கு.

ஓங்கார வட்டத்தினி லோங்கிநின்ற சத்திமெத்த
ஆங்காரங் கொண்டெழுந்தா ளண்டங் கிடுகிடென.
அடடா, யாளிமீதிற் காளிசூழ
யடித்துத்தங்கையர் வந்துகாழ
ஞாலியூளை யூழிமீற
நாட்டிற் றுஷ்டர்க் கூட்டம்மாற
அம்மம்மா வந்துபுகுந்தே மாரி சிந்தைமிகுந்தே.

அம்மையுமைமாரி யானந்தவல்லிவீரி
செம்மைப்படுத்த விந்தச்சீமை புகுந்திட்டாளே.
அம்மையேவி யலறவிட்டா
ளறுதிக்குளியாரை யேவிவிட்டாள்
சும்மாவிக்கத் தூறவிட்டாள்
சுருட்டியலம்பல் திரட்டிவிட்டாள்
அம்மம்மா ஆரணக்காரி வெகு காரணமாரி.

வீதிக்கு வீதியல்லோ பெங்கள்மாரி விளையாடிநிற்கையிலே
நீதியுள்ள மாரியத்தான் அம்மம்மா நினைக்கிறரே குடிகளெல்லாம்

அம்மாவம்மா மாரிகாளி
யாக்ஷிபேக்ஷி நாக்ஷி நீலி
அழகுசுந்தர வீரசூரி
யாளியேறும் ஆயிதாயி
படிமையென்றுமே குடிகள் தொழுது நின்றுமே

எங்கள்மத மெங்கள்மார்க்க மெல்லாருஞ் சேர்மினென்று
தங்கமுள்ள யிந்தியரைத் தூஷணித்த பாதகரே
தங்கள் தங்கள் மார்க்கம்போல
தவறிடாம லிருந்துபத்தி
பங்கமனுகா வகைபுரிந்திடா
பாவிகளுயிர் கூவிமேவிழ
வாட்டிநின்றாளே சொரூபங் காட்டிநின்றாளே

இதத்துக் கிதம்பேசி யிதுவுமொரு தர்வாசி
மதத்துக் குடையவரே மயங்காதீ ரென்றுசொல்லி
அகத்திலணுவும் பக்தியற்று
யன்னம்வேண்டி வேஷம்போட்டு
இகத்தின்வழியு மிழந்துகெட்டு
யிந்துத்தாயை மறந்துவிட்ட
பக்தியீனரை மாரி சத்திசீறினாள்;

வேதாந்த வித்தான வேதியரை வேண்டிவந்து
பாதம்பணிந்தேத்தி நிற்கும் பக்தர்களை யாதரித்தாள்
அரியரனடி யானபேர்களை
யடிபணிந்திட்ட ஞானத்தோர்களை
உரிமைசிறந்த உத்தமர்களை
ஓங்குப்நீதி வேதியர்களை
ரக்ஷித்துநின்றாள் துஷ்டரைப்பக்ஷித்து வென்றாள்.

உயிருக்குயிர்ப் பெலிகளுந்தமியே சத்தியமாய்
வெயிலவன்மே லாணைப்படி வெட்டுகிறோம் செட்டைகிடா
உன் கம்பக்குளிரத் தண்ணீர்பொழிவோந்
தரையிலுருண்டு புரண்டுகொடுப்போம்
கும்பக்கரையா னறியத்தாயே
குடிகளினிமே லடங்கிநடப்போம்
அம்மம்மா கோபங்கொள்ளாதே நாங்கள் பாபங்கொல்லாதே

அல்லோல கல்லோல மாக்கியகிலமதிற்
கொல்லாமல் கொன்றிட்டாளே கோபம்பெறுக்காமல்
துஷ்டர்குழுவைத் தொலைத்து மகிழ்ந்தாள்
தூயர்க்கருளேகொடுத்து மகிழ்ந்தாள்
இஷ்டமானபக்தர் செப்பு
மேற்றநேர்ச்சிக்கடனுக் கிசைந்தாள்
மாரியாங்காரி உள்ளங் கோபமேமாரி

எல்லாரும் பக்தியுட னேத்துவதைக் கண்டிரங்கி
நல்லோர் புகழும்மாரி நவிலுவாளே குடிகளுக்கு
உங்களுயிரைக் காக்கும்படியாய்
உண்ணிவேறு பெலிகளீய்ந்தீர்
மங்கையிந்தப்பிழையும் பொறுத்தேன்
மனதிற்பதிப்பீர் மதித்துநடப்பீர்
பத்திரமென்றே நீதி ஓதினாளன்றே.

தேவதையைத் தூஷணித்தும் வேதியரையேசுவித்த
பாவிகளின் எண்ணமதைப் பார்த்துப் பாதவித்து
இருக்கும், பொழுதி, லெரிக்கு, நெருப்பி
லரிக்கும், புழுப்போ, னெருக்கி, யசடர்
செய்யுங்கெடுதி மாரி தெரிந்துசடுதி.

அக்கினிக்காச்சல்களாம் அதிலிருந்துகட்டிகளாம்
உக்கிரவியாதிகளே வுலகமெங்குமேவினளே
பாவிச்சனங்காள் பார்த்துக்கொள்ளுங்கள்
பரிந்துபெலியும் விழுகும்மூந்துங்கள்
பாவச்செயலை செய்யாதிருங்கள்
பாரிற்கோப மெழுப்பாதிருங்கள்
காரணமீது யெங்கள் பூரணத்தாது.

எலிகள் விழுக்காட்டி பெச்சரிக்கை செய்தபின்பு
வலிய வியாதியிந்த வையமெல்லாம் பரவினதே
வந்தநோயின் வலிமைதெரிந்து
மாரியுமையின் மகிமைபுகழ்ந்து
சிந்தைசெய்தார் மீறுபரிந்து
தேவியருளே நிறைத்து விரைந்து
பாதகக்கும்பைப் பார்த்தது ஏவினாளம்பை

ஊரைவிட்டு ஓடினாலு முயர்குடிகள் வைகினாலும்
மாரிமகத்துவத்தை மதித்துரைக்கக் கூடுமோடி
ஓடினாலும் விரட்டிப்பிடித்தாள்
உயர்ந்தகுடிகள் புகுந்து மடித்தாள்
நாடித்தொழுது மடியர்குழுவை
நாடித்தேடி நாளுங்காத்தாள்
தெய்வகோபமே கெட்ட தீயசாபமே.

தெய்வத்தைத் தூஷணித்துத் தேசமெல்லா மோடினாலுந்
தெய்வம் விடாதென்றார் சீலமுள்ள ஞாலத்தோரே
எந்தத்தெய்வ மானபோதும்
இறைஞ்சிவாழ்த்திப் போற்றவேண்டும்
நிந்தையான பாவதோஷம்
விளைத்திட்டாக்கால் வருமேமோசம்
பாபஞ்செய்யாதீர் தெய்வ கோபங்கொள்ளாதீர்

வேதியரைத் தேவதையை வீணாகத் தூஷணித்து
மேதினியி லென்னபலன் கண்டதோசொல் மேலவரே
இருக்குநெறியை சுருக்கிவிரித்து
இருக்குவேதரின் மறைக்குளுரைத்தும்
திருக்குகளைவகள் செறியாதமைத்த
சீலவேதர் சிருவிலங்குந்
தெய்வமல்லாது வேறு திக்குண்டோ ஓது

எந்தமதமானாலு மெந்தக்குலமானாலுஞ்
சிந்தைசுத்தமாயிருந்தால் தீங்கணுகமாட்டாதே
தெளிந்தஞான சித்தத்தோரே
சிறந்தாதியைப் படைத்தபேரே
களிந்தவிந்தக் காலமெல்லாங்
கடவுள்செயலோ நமதுபலமோ
புத்தியுள்ளோரே தெய்வச் சித்திறுதேரே

சிந்தைதனிலரியைச் சீர்த்தியுறத் தோத்தரித்துத்
திருவேங்கடசாமி செப்புமிந்தச் செந்தமிழே
கற்றமேலோர் கருத்துட்கொள்ளுங்கள்
கடவுளருளைக் காணவில்லுங்கள்
கற்றவர்பேண் மாரியுமையும்
நாட்டில்மகிமை காட்டியாலயம்
காடினபின்னே குடிகள் தேடினார்பின்னே,

குடிகள் கூறும் சந்த விருத்தம்.

காடுமேடுபல ஙாடு ஓடியே கலக்கமுற்றபல குடிகளுந்
தேடி மாரியுமைமாடு சென்றநலஞ் சேரநீடுபுகழ் பாடியே
வாடிநின்றதிரு மக்கள் கூறுமுறை மாரி மாமணியுங் கேட்டுநேர்[வார்
கூடியானிதனிற் கூடுமாவினவின் கோலஞ் செய்யினெனப்போற்று

வேறு விருத்தம்.

செல்லொக்குங் கரியமேனித் திரிபுரை யுமையே தாயே
அல்லொக்கு மிருண்ட சித்தத் தடியரெம் மிசைநீதொட்ட
சொல்லொக்குங் கடியவேகச் சுடுகணை நிகர்பிளேக்கிவ்
வெல்லைக்கு ளணுகா வண்ண மீஸ்பரி காத்தி யம்மா. (2)

பலமனர் பணிபூந் தாரான் பாண்டிமன் னுளிப்பூவை
வலவனுர் பிணியைத் தீர்த்த வகையினுற் சோழமன்னர்க்
கலவிலா மனத்தா வீய்ந்த வடைவினுற் சோணாடாமித்
தலமிசை பிளேக்கு வென்ற சரந்தொடா தாருமம்மா (3)

மடக்கெனும் பலபேர்பூண்ட வளநகருதித்த விந்நோய்
கடக்கறும் பதிகள் தாண்டிக் கடிதினிற் றேனிபுக்கி
மடக்கறும் போடிகம்பம் மார்க்கையன் கோட்டையெல்லா
மடக்கியிக் குழந்தையெய்தி யடியரை வருத்துங்காலே. (4)

வல்லிநின் னுலயத்தில் வந்தடி பாரவிக் கேட்பப்
பல்லியும் பேசாநின்ற பாங்கினைத் தெரிந்தும்பண்பார்
அல்லிலை நெடுவேற்கண்ணு யடவிகள் புக்குதென்னச்
சொல்லிய வாசராக்ஞை குடியு மகன்றவந்தோம். (5)

மதியணிமாரியிந்த மாயநோய்புகுந்தமற்றைப்
பதியெலாம்பதிற்றுபத்து நாற்றுறுங்கணக்காய்ப்பாய்ந்து
சதித்ததுநீவாழிந்தத் தலத்தினிலேந்துபத்தாய்
மதித்தனர்நினதுமாண்பை மதிப்பிது லெருவோதாயே. (6)

என்றுகொண்டிறைஞ்சிவேதத் திறுதியிலடஞ்செய்நாதன்
மன்றுளுமாடிநின்ற மலரடிவணங்கியேத்தித்
தொன்றுதொட்டானித்திங்க டொறும்புரிவழக்கம்போல
குன்றுநேர்புயத்துவேந்தர் கூடியேகம்பம்நட்டார். (7)

கம்பம் நாட்டல் கூறியது.

தெம்பாங்கு.

அம்மனுரைத்தபடிக் காணிபதினைந்தினில்
கம்பமதைச்செவ்வாயிற் களிஉறவேநாட்டினுரே
பொன்னுனக்குயிலே ஓயிலே நன்னுண்மயிலே (1)

கம்பம்நாட்டிக் கொடியேறினதுங்கூறல்.

ஆட்டைவெட்டிக்கருப்பனுக்கு பழகாய்ப்பெலிகொடுத்து
நாட்டினார்கள்கம்பமென நாடிக்கொண்டாடினரே-பொன் (2)

கம்பநட்ட வஞ்சாநாள் காரணியாள்மாரியர்க்கு
உம்பருங்கொண்டாடவண்ண முசிதகொடியேற்றினரே—பொன் (3)

கட்டுமுட்டுநாகசுரம் நாகமேலாகவாத்தியமுங்
கொட்டுமுழக்குகளுங் குலுங்குதம்மன்கோவிலிலே-பொன் (4)

கம்பநட்டுக்கொடியேறக் கண்டவுடன்குடிபடைகள்
கும்பஜலங்கம்பத்தின்மேற் கொட்டுவதைக்கேளடி நீ-பொன் (5)

சூரியன்தோற்றங்கூறியது.

நேரிசை வெண்பா.

மாரியம்மன் கம்பமதில் மக்களெல்லாங் கூடிவந்து
வாருதியை போக்கும் வராகநதி—நீர்நிறைந்த
கும்பஜலம் பெய்யுகின்ற கூறறிவான் சூரியனு
மம்பரத்தில் வந்தானரோ. (6)

தண்ணீர் கொண்டுவரப் புறப்படும்போது பாடும்

முளைப்பாரிக்கும்மி.

தானனே தானனே தானனே தானனே-தான.

தானனே சொல்லுங்கடி ஞானமனோன்மணிகாள்
ஞானமனோன்மணிகாள் நாகரீகக்கண்மணிகாள் (தா)

சிந்தை மிகுமடியார் சேரார் சிவன்மகனும்
தொந்திவிநாயகனை தோத்தரிப்போங் கண்மணியே

சீராருந் தென்குழந்தை வாழுந் திரிபுரையாள்
திங்களொடுகங்கைபுனை தேவியுமை மாரியம்மன்

கம்பநட்டுக் கொடியேத்துங் காரணமா மாரியர்க்கு
உம்பர்களுங் கொண்டாடற் கோங்குந் திருநாளில்

சீர்த்தியுற நட்டதிருக் கம்பத்திற்குத் தெண்ணீரை
ஊத்திக் குளிர்க்கணுமே உத்தமியாள் கம்பத்திற்கு

மஞ்சளுருண்டைகளும் மாரியுமைபச்சிலையும்
தேங்காயுந்திருநீருஞ் செந்தூரப்பொட்டுகளும்

எடுத்துப்புறப்படுங்க ளென்வயதுப்பிள்ளைகளா
பட்டுப்பளபளெனப் பாதசரமோலமிட

கட்டிப்புறப்படுங்கள் கம்பத்திற்கு நீர்சொரிய
செப்புக்குடமெடுத்துச் சிங்காரப்பாய்படித்து

தப்பாமல்வந்துநின்று தாய்மாரிதாள்போற்றி
ஆற்றிலேஜலத்திறைத்து மழுகாய்த்தலைமுழுகி
அஞ்சுவர்ணப்பட்டெடுத்து அணிந்தாரிடைதனிலே
ஆச்சிதுணையெனவே யணிந்தார்கள்வெண்ணீறு
தேவிதுணையெனவே செந்தூரப்பொட்டுமிட்டார்
குங்குமப்பொட்டுமிட்டார் கூந்தலுக்குப்பூமுடித்தார்
ஆற்றின்ஜலமடங்க வழகுமஞ்சளேகலக்கி
கும்பம்நிறைத்தார்கள் கோதைமாரிபோராளே
குலவைகளிட்டாரே கோதையர்களெல்லாரும்
சாம்பிராணிதூபமது காட்டினார்கள்கும்பத்திற்கு
சப்ரங்கள்மீதுவைத்துத் தலைமீது தூக்கிவைத்தார்
தேங்காயைமேலேவைத்தார் பாங்கானமாலையிட்டார்
வேப்பிலையைக் கைப்பிடித்துத் தூக்கினார்கள்கும்பமதை
கும்பம்வருகுதுபார் கோலமுள்ளவீதியிலே (தானா)

ஜலநிறைத்த கும்பங்களின் மகத்துவநாமங்கூறிய

குறம்.

தினதேந்தினா தினதேந்தினா தினதேந்தினா தினனா
தென்னாதி நாதினனா தினதேந்தினா தினனா.

மகமாயிகம்பத்திற்கு வாய்த்தஜலக்கும்பம்
மகமேருகிரிபோல வருகுதடி கும்பம்
அஞ்சுசடைகொஞ்சவிளையாடினவள்கும்பம்
ஆகாசக்கங்கைதனை யடைத்துவைத்தகும்பம்
சோழீஸ்பரர்தீர்த்தஞ் சொரிந்ததிந்தக்கும்பம்
தோகையறம்வளர்த்தாள் தோய்ந்தஜலக்கும்பம்
குழந்தைவடிவேலன்வள்ளி தெய்வானைகும்பம்
கோலமதவாரணத்து வல்லபையின்கும்பம்
வரதராஜப்பெருமாள் வார்த்தஜலக்கும்பம்
வனசமலர்வந்ததிரு மங்களஞ்செய்கும்பம்
காளாத்தியீஸ்பரனாற் காட்சியுறுங்கும்பம்
கவினார்ந்தஞானாம்பாள் கவிக்கதிருக்கும்பம்
அலைகடலைத்தாண்டிவந்த வனுமாரின்கும்பம்
அண்டமெல்லாங்கண்டுவந்த கருடாழ்வார்கும்பம்
மலைகளெல்லாம்விளையாடும் வனதெய்வக்கு[illegible]
மனமகிழுங்கன்னிமார்கள் வளந்தி[illegible]
தலையாத்துஐயனாரின் தட[illegible]கும்பம்
சையம்வளர்கச்சி[illegible]ருள்சேர்கும்பம்
கைலாச[illegible]மை தைலாரம்மனகும்பம்
[illegible]தனாருள் காட்சியுற்றகும்பம்
[illegible]னார்ந்தமுருகமலைக் கர்த்தனருள்கும்பம்

கும்பக்கரைமல்லிகேசன் கூர்ந்தளித்தகும்பம்
குணமானவல்லியனுங் கொண்டுவந்தகும்பம்
கம்பத்தடிக்கருப்பன் காணிகொண்டகும்பம்
கனவீரபத்ரரின் கவினார்ந்தகும்பம்
தாமரைக்குளக்கிரிவாழ் தாமோதரன்கும்பம்
சன்னசிடக்காண்டி செழிம்புநாகூசிகும்பம்
ஆகாசியென்னுகூசிகா மாகூசியருள்கும்பம்
ஆனைமலைக்கோட்டைமுனி மதுரைவீரன்கும்பம்
வீசசக்கருப்பனுடன் மூத்தையனார்கும்பம்
வீரசின்னாமீனுகூசி முப்புடாசிகும்பம்
பகவதியங்காளியுமை பாஞ்சாலிகும்பம்
பட்டாளிசெல்லாயி மூத்தாளோகும்பம்
பட்டரையடிக்கருப்பன் பரிசுதந்தகும்பம்
பார்புகழும்வீரேஸ்பரப் பகவனருள்கும்பம்
தெருக்களெல்லாம்சிறந்துநிற்கும் தேவிகாளிகும்பம்
செயஞ்செய்துவேதியரின் சீர்த்தியுற்றகும்பம்
சதுர்வேதன்சரஸ்பதியுஞ் சார்ந்ததிருக்கும்பம்
தவவேள்விபுரியுமருந் தவத்தாரின்கும்பம்
ஆதிக்குலாலரொடு விசுவசமைகும்பம்
ஆரணத்தின்முடிவுகண்ட அடியாரின்கும்பம்
பாராளுஞ்சக்ரவர்த்தி பரிசுதந்தகும்பம்
பகதூரெம்ராமபத்ரா துரைகொடுத்தகும்பம்
செகம்புகழும்நவக்கிரகத் தேவதைகள்கும்பம்
திருவேங்கடசாமி செல்வமுறுங்கும்பம்.

தெம்மாங்கு.

கும்பஜலங்கொண்டுவந்து குளிர்ச்சியுறக்கம்பத்திமேல்
இன்பமுடன்பெய்வாரென் றெழுந்தார்மும்மூர்த்திகளும்
மூன்றுசுவரா யிலங்குகம்பத்தில்
முக்கணனுமையுஞ் சிவனுமரியும்
சான்றதிருவுஞ் சரசுபதியுஞ்
சாற்றுவேத பிர்மதேவரும்
வந்தங்கமர்ந்தே மூவர் சிந்தைமகிழ்ந்தே.

வெருக்குஞ்சமயமதி லெழிலார்ந்தகும்பமதை
லைவயிட்டுத் திரிபுரையேநாவலெனை
சிறக்குடு
தாளமேளந் தப்புமுழங்கத்
கவினும்நாக சாமுழங்க
வேலைரிகர்த்த சிறுவரோடு
விளங்குங்கற்பூக் வாணாதந்
குட
ஆந்தாணம்பாடி பமேலபா வந்தாரேகூடி.

தேவமாந்தர் வருகிற அடையாளக்குறியும் சிறப்புங் கூறியது.

அந்தரத்திலேயிருந்து அமரர்களுங்கெந்தருவர்
வந்துகும்மலோடுசேர்ந்து வாராமேசன்னிதிக்கு
வர்ணக்கும்பக் கலசெடுத்து
வாழ்த்திமாரி புகழைப்படித்துச்
சரணமிரண்டுந் தரைபடாமல்ச்
சம்போசங்கர சம்போவென்று
கூட்டங்கள்கூடி கும்மி யாட்டங்களாடி

தீர்த்தக்கும்பங் கொண்டுவரும்போது பாடிய ஆனந்தக்களிப்பு

சங்கர சங்கர சம்போ சிவ சங்கர சங்கர சங்கரா சம்போ.

திரிபுரைவாலை நமாவோம்—தேவ
தேவிமகமாயி இவையேநமாவோம்
சாம்பவி சடாக்ஷரி நமாவோம்-சிவ
சங்கரன்றேவி தயாபரிநமாவோம்

வேதாந்த வித்தேநமாவோம்—வேத
வித்தகிபராபரி விமலிநமாவோம்
ஓங்காரமேவி நமாவோம்-ஓங்கும்
உயிரெழுத்தைந்தான உமையேநமாவோம்.

மூக்கோணமூலி நமோவோம்-மூல
முருகனைப்பெற்ற சடாக்ஷரிநமாவோம்
காளிகங்காளி நமாவோம்-கருணைக்
கடலேகௌமாரி கபாலிநமாவோம்

கார்த்தருங் கார்த்தருளுமென்று—மக்கள்
கம்பத்தடியினில் வந்தணியாய்நின்று
மூர்த்திகளும் முனிவர்களுமகிழ-தேவர்
தீர்த்தஞ்சொரிந்தா ருமைமாரிமகிழ

செந்தமிழ்ப் புலவருளமகிழ-செப்புத்
திருவேங்கடசாமிக ருண்மாரிபொழிய
ஐந்துமுறை தீர்த்தங்கள்சொரிந்து-பால
ரப்பால்கடத்திபதைக் கேளடிபரிந்து—சங்கர.

வெண்பா.

தையலுமை மாரியர்க்குச் சாற்றிக் கொடியேற்றி
வையம் புகழவைத்த வர்த்தகத்தின் — ஐயசங்கச்
சிலா பெருமாளின் சீரா லபத்திருந்தே
காலச் சிறப்பித்தார் தான்.

தெம்பாங்கு.

தையலுமை மாரியர்க்குச் சாற்றுதலைசெய்தபின்பு
வையகமெல்லாம்புகழும் வர்த்தகத்தார்செய்ததிருச்
சிங்காரநேர்த்தி பலேபா மங்காதகீர்த்தி.

மங்களஞ்சேர்மாரியுமை மகிழ்ந்துபவனிவருஞ்
சிங்காரவீதியெல்லாஞ் சிறப்பிதஞ்சேர்பந்தலிட்டார்
வையம்புகழ மாரித் தையல்மகிழ.

பொன்னாலேகால்கணட்டுப் புகழானபந்தலிட்டு
என்னென்னசித்திரங்க ளிலங்கவிட்டார்பந்தலிலே
முத்தாலேதொங்கல் பலேபா வித்தாரச்சுங்கம்.

அந்தரப்பொம்மைகளு மழகானசித்ரங்களும்
பந்தலிலேதொங்கவிட்டார் இந்திரனார்லோகமென்ன
விண்ணாடுகொண்டார் பலேபா கண்ணாலேகண்டார்.

மங்காதகீர்த்தியுற்று வளமிகுத்ததென்கரையைச்
சிங்காரஞ்செய்துவிட்டார் திரிபுரையாள்மனமகிழக்
கூடிக்கொண்டாரே மாரிபுகழ் பாடிக்கொண்டாரே.

தேவலோக துந்துமியுந் தித்திகிடி முட்டிதப்பும்
ஆவலுடன் தம்பூரு மடித்துப் பலவிதமாய்ப்
பழக்கிக்கொண்டாரே மேளம் முழக்கின்றாரே

அம்மனுளமகிழ அலங்காரஞ் செய்துபார்த்த
சிம்மமிசை யமர்ந்து தேவி பவனிவந்த
கீதசாரமே பலேபா ஆரவாரமே

முத்திக்கி வித்தான வேதியரும் நீதிசெறி
வர்த்தகருங் குடிகளுமாய் வந்தணியாக் கூடினாரே
ஆதிமானேசர் பலேபா நீதிசேர்நேசர்

கோமளவல்லியரின் கோவில்த்திருப்பணிகள்
பூமிதனிற்செய்துபுகழ் பெற்றவரோ டுற்றதிருக்
காரியக்காரர் நீதி தேரியதீரர்

வேதகோஷ்டமெழுப்பி வேதியர்கள் சூழ்ந்துவர
பூதலம்பேண் ராமபத்ர பூமனும் வந்தாரொயிலார்
பட்டாளவேசம் பலேபா யிட்டாரேநேசர்

துப்பாக்கி கைப்பிடித்துத் துருப்புக் குதிரைமேறிச்
சிப்பாய்கள் வேசம்போட்டுச் சிறந்திட்டாரே தையல்மாக்கள்
மோடிசாட்டமே பலேபா பொம்மலாட்டமே

தொப்பி டிரசணிந்து துரைராசன் கர்னலைப்போல்
அப்படியே வந்துவிட்டா ராங்கிலேய பாஷைபேசி
ஊரகாட்சியே தையல் காரர்மாட்சியே

சுத்துக்குச் சுத்துயிந்த துரைமக்கள் பாராவாய்ப்
பத்துவரிசை நின்றார் பார்த்தோர் இடுகலங்க
சத்திநீதமே மெத்தச் சித்து மீதாமே.

வெண்டா.

திங்க ளொளிபோல திகழ்தந்தப் பல்லாக்கில்
மங்கை யுமைமாரி வந்தருளச்—சங்கம்
நிறைந்த பஜாரில் நிமலீ மகிழ்ந்து
நிறைந்து பவனிவந்தா ளேனர்.

176043

கோடியேறிய தினத்திலிருந்து 10 நாளும் நடப்பதேற விமரிசை கூறல் நோண்டிசிந்து.

அந்தரத் தமரர்வியக்கும்-சுந்தரமார் தந்தத்திலமைத்ததிருச் சிவிகைதனில், யோகதவ ஞானிகள்போற்ற-மூசிதமாரி உமையின் பவனிதனி லும்பர்வியக்கத், தாளந்தவி லுடனொத்து - சங்கீதவித் வர் சாஸ்திர முறைப்படிக்கே தோத்திரப்பாக்கள், ஆகிரீராகத்தி லெடுத்து-அம்மன்மன தனல்கண்ட மெழுகென வுமையவைத்து, நாகசுரமூது மளவில்-நாகரீக மாகவேபலருங்கொண்டாட்டமிகவே, நாரசிங்கன் வீரசங்கமே - தீரமுடன் நாராயணு ரங்க ரங்கநாதா, ரங்கரங்க ரங்கவெனவே-இங்கிதமாய்ச் சங்கொலி நிறைத்துச்சுரச் சிங்கம்வரவே, (தந்தினத்தோம் தனதானு)

காகக்காரரின்கூற்று ஷெ சிந்து.

சித்திரக்கரகமெடுத்துப் - பத்துப்பேர்கள் சுத்திலுங் கைகோ த்தவரை நிற்கவேவைத்து, ஊருவசி ரம்பையெனவே - உசிதவே டம் உம்பருங்கொண் டாடுவண்ண முருவமைக்க, தலையிற் கரக மிருக்கத் - தாம்பாளத் தட்டினிலே ரெண்டுதாளமிருக்க, பம்பை யுந் தவிலுமடிக்க — நாகசுரம் பாவனைக்கிசைந்தபடி பாடியும் நிற்க, பந்தங்கள் சுத்துகிறதும் - பாரமான கத்தியில் வாழைக்கனியைக் கொத்துகிறதும், சுத்திசுத்தி ஓடுகிறதும் — சற்றுநின்று தொங்கித் தொங்கி நொண்டியாடித் துவளுறதும், நாட்டியங்க ளாடுகிறதும்- நஞ்சுநிகர் நயனஞ்சுருட்டிநை சுழட்டறதும், ஆட்டம் விடாத படிக்கி — நீட்டமான வேஷ்டியிற் புராவமைத்துக்காட்டுகிறதும், கூட்டமுங் கும்மலுக்குள்ளே - பத்துவித ஆட்டக்கரக நின்று ஆடுகிறதே. (தந்தினத்தோம்)

பலவேசங்களின் பாங்குகூறல்.

தெம்மாங்கு.

இத்தனைகும்மலிலே யிடியிடிபாவனையாய்
சுத்திநகாருகொட்டிச் சூழ்ந்திட்டாரே வேசக்காரர்
தங்கந்தயிலாளே பலேபா பொன்னுக்குயிலாளே.

கன்னியர்க ளேழுபேராய்க் கவினார்ந்த வேஷமிட்டு
இன்னுருலம் பிண்டிபாலஞ் சொகுசாகக் கைப்பிடித்து
 கூடிக்கொண்டாரே கும்மலா யாடிநின்றாரே.
வேஷங்க ளிட்டவர்க்கு வெகுவாகத் தாம்பிணைத்து
கூசாமல்வாரபோது கும்மலிலே யாவேசம்
 வந்துமே நின்றார் வரந் தந்துமே நின்றார்.
கள்ளன் திருடனைப்போல்க் கனத்தவுருக்காட்டி
துள்ளித்துள்ளிவிளையாடி துலங்கிட்டானே வெகுசோக்காய்
 தந்தானம்பாடி பலேபா வந்தாரோகூடி.
குட்டிச்சுவருதாண்டி கொள்ளையடிப்பேனென்று
கட்டியக்காரனைப்போற் கனைத்திட்டானே கலகலென்று
 தந்தானக்குயிலே சோக்கா வந்தாரேமயிலே.
பிரிமுறுக்கி மேனிசுற்றி பிரிமனையைத்தலையிற்கட்டி
பெரிய உலக்கைதூக்கி புறப்பட்டாரே வெகுசோக்கா
 தந்தானக்குயிலே சோக்கா வந்தானேமயிலே.
அரிபகலையத்திலே யவலையள்ளிப் போட்டுக்கொண்டு
பெரியகுரலெழுப்பிப் பிள்ளைகளைப் பார்த்துநின்று
 ஆப்பட்டாவென்றே பலேபா கூப்பிட்டுநின்றார்.
வையம்மதிக்கும்படி வளர்மதுரை வீரனைப்போல்ப்
பொய்க்குதிரை யேறியல்லோ புறப்பட்டாரேவெகுசோக்காய்
 பொனனானக்குயிலே ஒயிலே நன்னானமயிலே.
கோமாளி வேஷமிட்டுக் குறவேடக்கூட்டங்கூடி
ஓமலிப்புத்திரும்படி உடற்கூற்றுப் பாட்டுப்பாடி
 தந்தானம்பாடி மயிலே வந்தாரேகூடி.
ஊமைக்குழலூதி ஒத்துமத்தாளங்கொட்டிக்
காமனிரதியர்க்குக் கலியாணம் பண்ணினாப்போல்
 நீதிகொண்டாரே பலேபா ஊதிக்கொண்டாரே.
வண்டியின்மேலோடமேற்றி வனம்போனராமமூர்த்தி
ஒண்டொடியாள் சீதையுடனொயிலாயிருந்ததைப்போல்
 முன்னாலேநம்பி பலேபா பின்னாலேதம்பி.
மார்க்கண்ட மாமுனியை மறலிபிடிக்கவந்த
தீர்க்கமதைக்கண்டு சிவன்சினந் துதைத்தபாவனைபோல்
 வண்டிமேலேற்றி பலேபா வந்தாரேபோற்றி.
சிலம்பமடித்துவரச் சிறந்துபுலி யாடிவர
நலமாக மக்களெல்லாம் நாடிக்கொண்டாடிவர
 கோலமுண்டாச்சு நல்ல காலமுண்டாச்சு.
தேவாதி தேவர்புகழ் தேவிமகத்துவத்தை
திருவேங்கடசாமி செந்தமிழால்ப் பாடிவர
 யோகமுண்டாச்சு நல்ல பாகமுண்டாச்சு.

அம்மன் பவனியில் வந்தமை கூறல்.

பத்தினியோங்காரி பவனிவரும் மகிமைச்
சித்திரத்தைக்கூற வாதிசேடனுஞ் சற்றேங்குவனே
வேதகோஷ்டமே சங் கீதபாட்டமே.

மல்லிகை முல்லைகளு மகிமையுள்ள ரோஜாவும்
வல்லிவரும் பாதையெல்லாம் மழையாய்ப் பொழிந்தாரே
மார்க்கதுவேஷம் இல்லா மகமதின்சிஷர்.

லந்தர்குளோப்புகளும் லயிட்டுந்தீவர்த்திகளும்
இந்திரனார் லோகமென்ன வெங்குந்திகுதிகென
பாங்குள்ள நீதிபோல ஓங்குதேசோதி

சாப்புக்கடைகளிலுஞ் ஜவுளிக்கடைமுனிலுங்
கோப்பானமலரைப் பொம்மை கொட்டுதல்லோகுபுகுபென
விண்மாரியென்ன மலர் பெய்தாரேமன்னர்.

சோதிமயமா யிலங்குஞ் சுந்தரியுஞ் சுந்தரமாய்
வேதப் பிராமணர்வாழ் வீதியினில் மேவினளே
ஆரணங்கொண்டார் வீதித் தோரணங்கண்டாள்

பாலைநிசர்த்தமொழிப் பாவையரும் மாரியர்க்கு
ஆலாத்திகாட்டியல்லோ யடிபணிந்து வாழ்த்திநின்று
கார்த்தருளென்றே யுளம் பூர்த்தியாய்நின்றார்

வக்கீலுந் யோகஸ்தரும் மாமறைதேர் மேலவரும்
முக்கண்ணி வாரதொரு முழக்கமதைக் கேட்டனே
குணநலங்கண்டார் யுமையை வணங்கியேநின்றார்

இத்தாதி வைபவமா யீஸ்பரியும் பவனிவந்து
வித்தாரமாயிலங்கு மாலயத்தில் மேவினளே
சூடதீபமே கண்டோடும் பாபமே.

குடிகள் மாரிக்காக மாவிளக்குகளைக் கொணர்ந்தவைகூறல்.

மாரியுமைக் கேற்றதிரு மாதாந்தச் செவ்வாயில்
பாரிலுள்ளோர் மாவிளக்கின் பவனிவந்து கூடினரே
பொன்னனைக் குயிலே ஒயிலே நன்னனை மயிலே

வண்ணத்தினையிடித்து மாவையுண்டுபண்ணிபதில்
வெண்ணெயுருக்கிநெய்யை விட்டுவிளக்கிட்டாரே (பொன்)

முத்துச்சரங்களுடன் வெள்ளிலையின் கோர்வைகளும்
வைத்துவிளக்கேற்றியல்லோ வயங்குதம்மன் மாவிளக்கு(பொ)

செந்திருவை யொத்தகிருச் சேயிழைகள் சீர்த்தியுறப்
பந்திபந்தியாகக்கூடி பவனிவந்தாரேமகிழ்ந்து (பொன்)

சித்திரப்பூங்கொத்துகளுஞ் செறிந்தமலர்சோடினையும்
வித்தாரமாயணிந்து விளங்குதம்மா மாவிளக்கு (பொன்)
முத்துநகைமெல்லியர்கள் முடிமீதிவேடிக்கையாய்
வைத்தொளிருஞ் சூரியன்போல் வயங்குதம்மன்மாவிளக்கு ()
மங்களஞ்சேர் வாத்தியமும் மாதர் குலவைகளும்
பொங்குகடற் போலிரையப் பூவையரும் பவனிவந்து (பொ)
சிங்காரமாயிலங்குந் தேவியுமையாலயத்தில்
மங்கையர்வணங்கியுயர் மாரிக்கபிஷேகஞ்செய்தார் (பொ)
தேவியுமைமாரிதந்த திருநீருந்தீர்த்தமுண்டு
பூவையர்களெல்லாரும் போற்றிவந்தாராரணங்கே (பொ)

நொண்டிச்சிந்து.

மங்களமிகுந்தமயிலே மாரியுமை - துங்கவருள் தங்குவளஞ் சொல்லுவோங்கேளே, திங்களணி சிங்கவாகனி எங்குநிறை - சங்கணி பரர்க்கிளைய தங்கையம்மணி, பூரணத்திருநாளில் காரணியின் - சீரணிபுகழ்ந்தடியர் வருநாளில், தங்கடங்க சங்கடங்களிற் மங்கையரே - பொங்கற்பெலி செய்வோமென்று புகன்றபடி, மாவாலேதீபமெடுத்து பூவையர்கள் - பொங்கலும் நடத்தியபி னிங்கிதமுடன், செமமரிக்கடாக்களுக்கு சிறப்புடன் - திகழ்ந்திடு மாலையிட்டுத் திலதமிட்டு, எந்தனிடர்தீர்த்தவுமையே யுந்தனுக்கு — முந்தநாளுரைத்தபடி யேர்த்தருளென்று, மஞ்சணீரள்ளித்தெளிக்க மறைக்கிடா- மளமளமளவென குலுக்கிநிற்க, ஆக்ஷியருக் கபயமென்றே ஆட்டுக் கடா - அலறிவிழுகத்தலை வெட்டினரன்றே, ஆதிபராஞ் சோதியருளால் பீதியற வீதியிற்கொடுத்தபெலி ஓதிடிலக்ஷம், வெட்டிய பெலியின்தலைகள் தட்டுக்கெட்டுக் - கொட்டிய விரத்த வெள்ளம் தபுருபென, வாருதிசிற்றாரணிகராய் பாரிவந்து - மாரியின்வாரகநதி வீரிடப்பாயும், குண்டுகளையெக்கவேதலை துண்டமான—முண்டத்தின்கணக்குரைக்கக்கூடுமோவிண்டு, வீதிக்கிவீதியடியார் நீதியுளவேதியள்நேர்ச்சிக்கடன்செய் விபரமதை, இன்னதெனச் சொல்ல வெளிதோ யன்னையுமை - இனியதிருவருளுக் கிதுபெரிதோ—தந்.

வெண்பா.

கம்பங்க ளாட்டதினைக் கண்டதினங் கொண்டடியார்
ரும்பருங்கொண் டாடற் குறியவள்மேல்—நம்பிக்கை
வைத்தோ ரொருவேளை மட்டுமன்ன மேபுசித்துப்
பத்தி செலுத்தி வந்தார் பார்.

கட்டளைக்கலித்துறை.

முக்கணிக்கேற்ற திருநாடினத்தில் மூண்டெரியு
மக்கினிச்சட்டிக ளங்கையிலேந்தி யடியர்குழாத்
திக்கெனச்செந்தீ யுடம்பெலாம்போர்க்கச் சிறிதுமஞ்சா
தக்கணிமீசிக் கபயமென்றேத்தி யடர்ந்தனரே.

அகவற்பா.

திங்களருகணி சங்கரனிடைவளர்
உக்கிரமாரியை யக்கணிவீரியை
அக்கரமெட்டுறும் பக்குவக்காரியை
மகிடசங்காரியை அகிலசிங்காரியை
இடைவிடாதேத்தி தடைபடாநேத்தி
விரதியராகிய சரததியானியர்
ஓங்கியதிருநாள் பாங்குறுதினத்தில்
உமையவள்திருவருள் அமையுறநிறைந்த
காளியின்சன்னிதி காலையும்மன்னியே
தேவியின்திருவருள் மேவியேநின்றிட
சன்னதவந்தொரு கன்னியவாடியே
மஞ்சணீர்பாலையும் பஞ்சாக்ஷரத்தையும்
மாரியாங்காரிநீ காவெனத்தந்திட
குலவைகளார்க்கப் பலவகைமேளம்
ஆர்த்திடத்தந்தருள் தீர்த்தமுமருந்தி
உமையவள்திருவருள் அமைந்திடபச்சிலே
தேவியின்திருநீர் தாவியுங்கரத்தில்
வெந்நீரணிந்திரு கண்ணீர்சொரிந்து
காலணியணிந்து கையணிபுனைந்து
மாலைகளணிந்து மேலணியணிந்து
குச்சிலுருமால் கூர்தரவமைத்து
மெச்சுங்கலாபமா குச்சிதத்தோகைபோல்
காலணிசதங்கைக் கலீர்க்கலீரென
மேலணியாரம் பளீர்பளீரென
பம்பையுந்தவிலுங் கும்மலாயடிக்க
நாகசுரங்களு மோகமாயூதிட
மகர்மகனிவனோ மணமகனிவனோ
காமனோவலதவர் மாமனோமயிலுயர்
வேலனோசெந்திரு சீலனோவென்றிட
நின்றதோர்நிலையின் னின்றவனொடி
உடலைமுறுக்கிக் கடலையுறுக்கிக்
குடிக்குனன்போல வெடித்திதிருகுறளாய்
ஆவெனக்கூறி ஓவெனத்தேரி
வேப்பிலைதின்று காப்பணிந்தன்று
இருவிழிசெவப்பக் கருமயிலுவப்ப
ஆனந்தநடன மாடியுஞ்சிரித்து
சந்தனம்பிளந்த இந்தனமடுக்கி
ஆவினெய்யூற்றி காய்கனல்மூட்டி
கார்கிராகக் கரும்புகைமண்ட

சிரியேயங்கி பேருறவோங்கிச்
சுவாலைகள்வீசத் துவாதசநாமன்
தங்கையுமரனார் மங்கையுமாதனும்
மழுவணிமாரியைத் தொழுதுளந்தேரியே
பக்கமிருப்பவர் திக்கெனப்பயந்திட
பம்பரம்போலவ ரிம்பரிற்சுழண்டு
வலமிடமோடியே பலமுடிநொடியே
அம்மணிமாரி யம்மணிகார்ப்பென
விண்ணையும்நோக்கிக் கண்ணையுமூக்கின்
நுனியிலிருத்திக் கனியருள்பொருந்தி
சாம்பவிமயேஸ்பரி சங்கரிதிரிபுரி
பாம்பணியீஸ்பரி பகவதிபார்வதி
மாரியாங்காரி வீரியோங்காரி
அடுத்தோர்க்கருள்புரி திடத்தாள்மனோகரீ
என்றுளமேத்தி னின்று
எடுத்தனாக்கினி தொடுத்தெரிகலமே.

கட்டளைக்கலித்துறை.

சிங்கத்தைவெத்த திரடோள் வலியினர் சிருடனே
தங்கச்சலாகைத் தனைத்தோ ளிருபுறந் தைத்திடுநா
ணெங்கு மிலங்கு மிறைவி யருளாலிமையவரும்
மங்களம்பாடினர் மானிடர் கூடினர் மானிலத்தே.

தெம்மாங்கு.

கச்சணியுங் கொங்கையுமை காவலென மானிடர்கள்
அச்சறமறக்காளி பீடமழகாய் நடந்தாரே
தங்கத்தயிலாளே பலேபா பொன்னுங்குயிலாளே.

தேவாதிதேவர்தொழுந் தேவியுமே தொழுது
கோவலவன் போலயல்லோ கோலங்கள்கொண்டாரே.

தச்சையணிந்தும் காசெல்த்தண்டை
கெச்சமணிந்தங் கீரிச்சந்தனம்
தைச்சயிடங்கள் தனையுமரைத்து
தரணியடியார் பாணிபாடிடவே
பச்சைமயிலான் பாதம்பணிந்து
பார்த்தோருளமே பூர்த்துமகிழ
ஆட்டங்களாடி பலேபா கூட்டமாய்கூடி

பக்தத்தாக்கு மூன்றுகம்பி பாங்காகக்குந்தைதயிலே
அக்கணியுமீஸ்பரியு மருளா ணிறைந்தாளே

எங்குமடியார் பங்கிலிலங்கும்
இறைவியுமையும் பாவிநிறைந்து

அங்கங்கேகி யருளுண்டாகி
யடியர்குழுவி லவதியனுகா
தெங்குழலவு மீசியருளே
செவ்வியுறவே தெரிந்துமகிழ்ந்து
தந்தானம்பாடி பலேபா வந்தாரேகூடி.

அத்தனைகம்பிகளை யடுக்காகக் குத்தியுமே
ரத்தம்வரக்காணுமே நாயகியாள் திருவருளை

பாருமிந்தப் பாருலகினில்ப்
பகவத்தருளைப் பரிவினுடனே
கூருமிந்தக் கொடியகலியிற்
கூடதேவதை _கூர்ந்தவருளே
சிறுபெறவே செகத்திற்காட்டிய
சித்துமெத்த தெய்வசித்தென
வேண்டிக்கொண்டாரே யருள் பூண்டுகொண்டாரே

தெய்வங்களில்லையென்று தீங்குசெப்புஞ்சிலருக்கு
ஐயஞ்செனித்தல்லோ யரியமர்மாள் கிருபையாலே

இகத்திற்கிரிகை யியற்றும்பேர்க்கு
இச்சாசத்தியா யிலங்கிநிற்பாள்
மகத்தில் ஞானம் படைத்த பேர்க்கு
மகிழ்ந்துஞானு சத்தியாவாள்
யுகத்தின் மகிமை பலவிதங்களா
யுலகிருக்கினும் நலமிகுத்தருள்
தெய்வமுண்டென்றே பக்தி சேர்ந்தணிநின்றே

மங்காதகீர்த்தியுற்ற மாகுழந்தைவாழுகின்ற
சிங்காரமாரியத்தான் சிந்தித்தாரே சிலர்களும்

பம்பைதவிலும் பேரியறைய
பாரில்மாதர் குலவைநிறைய
உம்பர்புஷ்ப மாரிபொழிய
உலகிலடியர்க் குறுதிமலிய
கம்பம்ரஸ்தா வீதிநிறைய
கைகள் தூக்கிக் கருடன்போல
தந்தானம்பாடி சோக்கா வந்தாரேகூடி

வெண்பா.

இவ்வா றடியா ரிலங்குஞ் செகுளீட்டிச்
செவ்வாய் திறந்தாகோ அம்மாஓ—சிவ்வான
தேவியே தஞ்சமென்று சீராய்வினைபாடி
கூவியே வந்தார் குழு.

குழந்தைகளுக்கு கருப்புள்ளி செம்புள்ளி குத்தி வந்தமை கூறல் கட்டளைக்கலித்துறை.

விண்ணி லெழிலுடன் வேலை கிரிசூழ விளக்குமுமைப்
பெண்ணி னழகும் பிறங்கிடக் காட்டிப் பிரபலமாய்
மண்ணி லடியார் மகிழ்ந்து மதலை மதிவதனந்
தெண்ணி லளவரும் புள்ளிக ளிட்டி யெழுந்தனரே.

தெம்பாங்கு.

அக்கினிச்சட்டிகளு மணியணியாய்ச்செகுலுகளும்
பக்குவஞ்சேர் பிள்ளைகளின் பாங்கானகோலங்களும்
அடடா ஆட்டக்கரகம் அக்கினிசட்டிக
எறியமகிமை படைத்தசெகுல்கள்
கூட்டமாகக் குழந்தைகள்முகங்
கோலமுறவே வகுத்தபுள்ளிகள்
காட்டிமுன்னம் கவின்ற கூட்டங்கள்
காலாபக்கமு நாடிப்பாடியே
கூடிக்கொண்டாரே சன்னிதி நாடிநின்றாரே.

அம்மன் ரதத்திலமர்ந்தருள்புரிந்துள பவனி

வெண்பா.

வந்தங் கணியணியாய் வாழ்த்தியுமை மாரியர்க்குச்
சிந்தை களிகூரச் செய்திருநாள்—சந்ததம்பேண்
காரணமாய்க் காட்சிதருங் கண்ணுதலாள் தேரேறி
வார பவனிபகர் வாம்.

கட்டளைக் கலித்துறை.

பொன்னு லமைத்திட்ட பொற்றேரிலேறிப் புவனமெல்லாந்
தன்னே ரிலாத தகைமைத்தாய்மாரி சகலஜனம்
மன்னியேநின்று வணங்கிநிறைய மகிழ்ந்துமக்கா
ளென்னுளும் வாழியென் றாசிகள்கூறின ளீஸ்பரியே.

பாதிராத்திரி வேளையில் என்ற வர்ண மெட்டு.

ஆதிவேதபு ராணகிதங்க ளாகமங்களுந் தேடிக் காணு
அம்மைமாரின்முன் கூடி யன்பர்
அலகிலாப்புகழ் பாடி வந்து
அன்றுசெய்திட்ட ஆடல்பாடலை யார்சொல்வார் மனங்கூடி
வேதவேதியர் நீதியார்த்திடும் மூலமந்திரங் கூற கடை
விதிவர்த்தகர் சார பல
வேதார்த்தனர் மீர சர்த்தர்
வேலையாட்களும் சீலமாகவே வேதிகாவலராய்ச்சேர

மங்களமுரசங்களும்பல சங்கவாத்தியக் கூட்டம் பிர
சங்கமாக்களி   னீட்டம் பல
துங்கசாதியர்   நாட்டம் மிக
மாசிலாதருள் மாரிதேர்மிசை வந்தசீரேகொண் டாட்டம்

அக்கினிவளர்த் திட்டபாத்திர யேந்தியேவாரதோர் சங்கம் அதி
ஞாபாரமே   யெங்கும் செகு
லானதைத்தைத்த   சிங்கம் ஓடி
ஆடிப்பாடியுங் கூடியேவார வானந்தமெத்தப்பொங்கும்

சன்னதித்தெரு வீதியும்பல சாதியார்வதி வீதி பஜார்
சார்ந்தவங்காடி   வீதி சபைக்
கானமன்னரின்   வீதி நீதி
சாருமாமறை யோர்கள் வீதியும் சார்ந்துவந்தனன் வேதி

வீதியிற்பலநீதிவான்களுக்காதிகாட்சிகள்காட்டி பல
நீதியார்வள   மீட்டி நல
மோதிவாடிக்கை   நீட்டி மறை
வேலைபோலொலி கூறிவானவர் விண்மலர்பொழிந் தாட்டி

வேததந்தமி சேரொலித்திட தேவிகோவிலில் மேவி திருச்
சிலைகொண்டரைக்   கூவி இந்தச்
சீர்த்திபோலென்றன்   கோவில் மாட்சி
தேரியேதிரு வேங்கடசுவாமி செஞ்சொல்ப் போல்மிகும் பூவில்

என்றுரைத்தெழிற் தொண்டர் ஏத்திட தீர்த்தமுந்திருநீறும்உமை
யீய்ந்திடப்பெற்றெல்   லோரு மாரி
யீங்குநின்றெமைக்   காரும் என்று
ஏத்திவாழ்த்தியே வாழிபாடினர் வாழிமாரியர்மேல் கூறும்

தோத்திரப்பாக்கள்.

விருத்தம்.

திங்களுமரவுங் கொன்றையுமருகுந் திருமுடி புனைந்தவனிடையில்த்
தங்கிய மணியேதவத்தினர்க்கணியேசங்கணிச்செங்கையார்க்கிளைய
மங்களமிகுத்த மரகதநிறத்து மனோன்மணி மானிலம்வாழச்
சிங்கமீதமர்ந்து வந்தருள் புரிவாய் சிவமணி மாரியம்மணியே.

ஓங்கிய புகழுந் தாங்கியிவ்வுலகும்பர் வாழுந்தரமுதலா
யேங்கிடாதிலங்கும் பாங்குயர்பரமே யெழில்வடிவேலவர்க்கனையே
மாங்குயில்பாட மயிலினமாடும் வனங்கிரிவயல்நதிவளங்கள்
தேங்கிய குழந்தையம்பதி திகழுஞ்சிவமணி மாரியம்மணியே.

ஆதியிற்சோழனருந்துயர்தீர்த்துமவன் றனலமைத்தபொற்கோவில்
நீதிசேர்மறையோர் நிகரிலாக்குளங்கள் நிலம்பல மானியமாகச்
சோதியாத்திகழ்குசோ ஸ்ரீசருக்கிதயஞ் சுயம்பிரகாசமாத் துலங்கத்
தீதிலாப்பூசை விளங்கியே யிலங்குஞ்சிவமணிமாரியம்மணியே.

ஒருபா லுருவிற் பாதிநீயாகி யுலகுயிர்க்காதரவான
கருநிறமயிலே கடவுளர்க்கிறையே காரண பூரணமறையே
திருவணிமார்பக் கிளையசோதரியே சிறியவர் செய்பிழையனைத்துந்
நவுளத்தடக்கித் தினந்தினங் காக்குஞ்சிவமணி மாரியம்மணியே.

கபாலி சுந்தரிநீலி தூயவர்பேணுஞ்சு சீலி
மாலினுக்கிளைய மாதவவேலி மாசிலா மறைக்கனுகூலி
வேலிறைபோற்றும் வித்தகசூலி விண்ணவர் மண்ணவர்சீலி
பாலினிநெய்போ லடியருள் வைகும்பாமணி மாரியம்மணியே.

தாயெனச் சகலயுயிரை மீன்றுதந்தையாய் ஞானமே யீய்ந்து
தூயநல்லுணர்வு துலங்கிடக்குருவாய்ச் சுருதிபால் வருதிகளீய்ந்து
நேயமார் நெறியா லுலகினைப் புரக்கும் நிமலைநின் சேவடிமலரை
சேயனென்றெழுதேன் றிருவருள்புரிந்தாள் சிவமணிமாரியம்மணியே

எல்லையிற்றெய்வமில்லையிப்புவிமேலிருக்குமிம்மனுடர்தான்றெய்வங்
கல்லையுஞ்செம்புக் கட்டையுந்தெய்வ மாக்கிலாகுமோ வென்று
ஒல்லையிற்பழுது சொல்லுவதன்றியொருசிறுகுழவியோர்புழுவைச்
செல்லமாங் குழவியாக்கு சீறிமேயன் சிவமணி மாரியம்மணியே

கற்புளார்மீதும் விதவையர்மீதுங் கன்னியர் மீதுமேகாம
உற்பனஞ்செய்து முழன்றல முலர்ந்தவுலுத்தனென் பிழைகளைத்தாள்வாய்
கற்பகக்காவுங் கனகமாங்கிரியுங் கைலையம்பதியையும் நிகர்த்த
சிற்பரானந்த குழந்தையம்பதிவாழ் சிவமணி மாரியம்மணியே

காலின்மூன்றுரைக்கப் பொருத பொன்றடலிற் கம்பிசனிட்டவுங்காத்தாய்
சாலவும் வெங்கீர்சகித்திடாத தேசந்தழற் கொழுந்தேற்றிடக்காத்தாய்
சாலவிக் குழந்தைப்பதியினில் வினது சாஸ்பதக்கிருபைவைத்தகில
செழும்படைக்கச் செய்தனையாள்வாய் சிவமணிமாரியம்மணியே.

உன்னருளன்றி யுலகினில் வேறோறுறுதியு முளத்தினிலறியா
வென்னைநீயாளற் கென்னறிம்மாவருத்த மேவலோபில்லையோ பேயோ
பின்னிபகடேனு [illegible] ஈகவக்கிரம் பிதுர்குருசாபம்
மன்னிலுந் தீர்த்து [illegible] யாள்வாய்மதியணி மாரிவாழியவே

மாரியம்பாள் மகத்துவம்,

முற்றுப்பெற்றது.

வெண்பா.

கார்வாழி காசினி வாழி கவர்மெண்ட்டார்
சீர்வாழி வாழி சிவக்குழந்தை—ஊர்வாழி
உத்தமியாம் மாரியம்பா ளோங்கும் புகழ்வாழி
வித்தகசங் கத்தவர்வா ழி.

மேலாம் பபனுதவும் வித்தகர்நேர் முத்தமிழ்நூல்
எலா வகைபதித்து நற்பெயர்கொள்—மாலர்
குருசாமித் கோனிராமச் சந்த்ர விலாசத்
தருநாளு மின்பந் தரும்.

புத்தக விளம்பரம்.

61 வருஷ பஞ்சாங்கம்

4—1854 (ஆனந்த) முதல் 12—4—1915 (ஆன... ...ள்ள பஞ்சாங்கங்களை யெல்லாத்திரட்டி சோதிட... உபயோகமுள்ள அனேக அரிய விஷயங்களைத்தெ... ...லாவித ஆண்டு மாதம் தேதி இவைகளோடு பல இ... ...யுஞ்சேர்த்து, சோதிடர்களுக்கோர் பொக்கிசத்தை... நல்ல கிளேஸ்கடிதத்தில் அச்சிட்டுள்ளது.

விலை ரூ. 8 0 0. தபால் கூலி ரூ. 1 0 0.

சோதிடப் பேரகராதி
(அச்சிலிருக்கிறது)

இது:—வெகுகாலமாய் சோதிடர்களனைவரும் எதிர்பார்த்திருந்த அரும்பெரும் பொக்கிஷமாகும். இந்நூலைப்பற்றி விரிவாய்ப் பேசுவது இங்கு விரிக்க வேண்டுவதில்லை. அச்சிடும் வேலை துரிதமாய் நடைபெற்று வருவதால் புத்தகம் முடிந்தவுடன் வேறு பெரியவிளம்பரம் வெளிவரும். 61-வருஷ பஞ்சாங்கம் அச்சிட்டதுமுதல் இந்நூல் எழுத ஆரம்பிக்கப் பெற்று தமிழ் இலக்கிய நூற்களும் அனேக சோதிட நூற்களுங்கிடைத்தவரை சேகரித்து ஆராய்ந்து கூடியவரையிலும் எல்லாப்பதங்களுக்கும் பிரதிபதந்தேடி எழுதி முடிவுபெற்று வருகிறது. இவ்வகராதி புத்தக ரூபமாய் வெளிவருவதானது சோதிடர்களுக்கோர் நல்லதிஷ்டமேயாம். விலை விபரம் பின்னாலறிவிக்கலாகும்.

ஜோதிடப்புத்தகங்கள்.		சாதகாலங்காரம்உரை	2—0—0
		சுந்தரசேகரம்	0-12—0
வாணசேகர சத்தகோவ		பலதீபிகை	2—8—0
திவம்	1—0—0	கௌசிகசித்தாமணி	0-12—0
...ராசரியம்	0-12—0	...த்திவாக்கியம்	1—4—0
...மணி உவ்வமு		ஷை இரண்டாம்பாகம்	1—4—0
...யான் (உரை)	1—0—0	ஷை மூன்றாம்பாகம்	1—8—0
...மேகர உள்ளுடை		சத்தரிசிவாக்யம்5500	4—0—0
யான் உரை	1—4—0	ஜோதிடகுணகாரம்	0-12—0
சுந்தரானந்தர்ஜோதிடம்	3—0—0	சந்திரகாவியஉரை	0-10—0
...ராசாத்திரம்	1—0—0	மச்சமுனிவர்சோதிடம்	0—5—0

இன்னும் நானாவிதமான தமிழ்ப்புத்தகங்களும், ஸ்கூல்புத்தகங்களும் நமது புத்தகசாலையில் விலை சகாயமாகக்கிடைக்கும்.

விலாசம்

ஏ. கே. லிங்கம் புத்தகசாலை, மதுரை.